# கல்வெட்டு

KALVETTU

திருவள்ளுவராண்டு 2033 (சித்ரபானு ஆண்டு) ஆனித் திங்கள்



பௌத்தப்பள்ளி பற்றிய கல்வெட்டும், புத்தர் சிற்பமும்,
கீழ்க்குறிச்சி, திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

காலாண்டிதழ்-57 (2002 ஜூலைத் திங்கள்) விலை ரூ. 1-50
தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

உள்ளே......

பக்கம்

1. Recent Epigraphical Discoveries in Pandya Region
— C. Santhalingam ... ... 1

2. Martial Arts of Tamilnadu
— M. Chandramoorthy ... ... 7

3. Rules for Sculpting the Jaina Statues in Ancient Tamil Soil
— Dr. S. Soundarapandian ... 12

4. கீழ்க்குறிச்சி பௌத்தப்பள்ளிக் கல்வெட்டு
— கி. ஸ்ரீதரன் ... ... 14

5. வாழைத் தோட்டம் கன்னடக் கல்வெட்டு ..
— முனைவர் இரா.ப. கருணானந்தன்... 16

6. அச்சந்திரம் - கல்வெட்டுகள்
— முனைவர் ஆ. பத்மாவதி 18

7. முகப்பேறு ஆய்வு
— சி. இராமச்சந்திரன் .. ... 23

8. உடையார் கோயில்
— ச. பரணன் ... ... 27

9. சென்னையில் கி.பி. 17ஆம் நூற்றாண்டு கிணறு
— சீ. வசந்தி ... ... 30

10. புதுப்பாடி வேதநாராயண பெருமாள் கோயில்
— து. துளசிராமன் .. ... 33

11. அண்மைக்கால அகழாய்வுகள் 37

க. அஷோக் வர்தன் ஷெட்டி, இ.ஆ.ப.
ஆணையர், தொல்லியல் துறை

3-வது குறுக்கு சாலை
தரமணி
சென்னை - 600 113
04 - 12 - 2002

# பதிப்புரை

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையின் பணிகள், முக்கிய கண்டுபிடிப்புகள் மற்றும் ஆய்வுக் கட்டுரைகள் துறையின் காலாண்டிதழான கல்வெட்டு இதழில் வெளியிடப்படுகின்றன. இதுவரை 56 இதழ்கள் வெளிவந்துள்ளன. 57ஆவது இதழ் பல்வேறு சிறப்பு அம்சங்களை உடையதாக விளங்குகிறது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் அருப்புக்கோட்டைப் பகுதியில் பாண்டியர் நாட்டில் இருந்த தென்னிலங்கை வளஞ்சியர் என்னும் வணிகக் குழுவினர் பற்றி கூறும் கல்வெட்டும், எழுத்துப் பொறிக்கப்பட்ட சிற்பங்கள் பற்றிய கட்டுரையும் இடம் பெற்றுள்ளன. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் கீழ்க்குறிச்சி என்ற ஊரில் இருந்த பௌத்தபள்ளி பற்றிக் குறிப்பிடும் கி.பி. 11-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டும், வழிபாட்டில் இருந்த புத்தர் சிற்பம் பற்றியும் கட்டுரை வெளிவந்துள்ளது. நீலகிரி மாவட்டத்தில் காணப்படும் கன்னடக் கல்வெட்டு பற்றிய குறிப்பு இடம் பெற்றுள்ளது.

தர்மபுரி மாவட்டத்தில் அச்சந்திரம் என்ற ஊரிலுள்ள கோயிலில் காணப்படும் கல்வெட்டுகளில் அவ்வூர் திருவத்தியூர் அத்திசமுத்திரம் என்று குறிப்பிடப்படுகிறது. காலப்போக்கில் இவ்வூர் அச்சந்திரம் என மருவி வழங்கப்படுகிறது என்பது ஒரு கட்டுரையிலிருந்து அறியப்படுகிறது. அது போன்று சென்னை நகரின் ஒரு பகுதியாக விளங்கும் முகப்பேறு பற்றிய கட்டுரையில் விசைய நுளப்பியாறு என்று இப்பகுதியில் இருந்த சிறிய

ஆற்றின் பெயர் முளப்பியாறு எனத்திரிந்து முகப்பேறு என்று இன்று அழைக்கப்படுகிறது என்பதை அறிகிறோம். ஊர்ப் பெயர் ஆய்வுக்கு இக்கட்டுரைகள் பெரிதும் உதவும்.

தஞ்சை மாவட்டத்தில் உள்ள வரலாற்றுச் சிறப்பு மிக்க கோயிலான திருக்களாவுடையார் கோயில் மற்றும், அழகிய சிற்பங்கள் நிறைந்த புதுப்பாடி வேதநாராயண பெருமாள் கோயில் பற்றிய கட்டுரைகள் கோயில் ஆய்வுக்கு உதவும் வகையில் அமைந்துள்ளன.

கோவை மாவட்டம், பேரூரிலும், திருநெல்வேலி மாவட்டம் மாங்குடியிலும் இத்துறை அகழாய்வுப் பணியினை மேற்கொண்டது. அவ்வாய்வில் கலைநயமிக்க சுடுமண் பொம்மைகள், சேர மன்னர், இலச்சினை பொறிக்கப்பட்ட சுடுமண் சில்லு, வண்ணக் கல்மணிகள், கி.மு. இரண்டாம் நூற்றாண்டினைச் சார்ந்த தமிழ் பிராமி எழுத்து பொறிக்கப்பட்ட பானை ஓடுகள், மற்றும் பல வகையான குறியீடுகள் (GRAFFITI) பொறிக்கப்பட்ட பானை ஓடுகள், நுண்கற்காலக் கருவிகள் போன்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க தொல்பொருட்கள் கிடைத்துள்ளன என்ற சிறிய அறிக்கைக் குறிப்பும் இதழில் வெளியிடப்பட்டுள்ளது. தமிழக வரலாற்று ஆய்வுக்கு இவ்வகழாய்வின் வெளிப்பாடுகள் மேலும் துணைபுரிவ தாக அமைகின்றன.

மானசாரம் என்னும் சிற்ப நூலில் கூறப்பட்டுள்ள சமணத் திருமேனிகள் வடிப்பது பற்றிய கட்டுரையும், தமிழகத்தின் வீரத்தை வெளிப்படுத்தும் பண்டைய வீர விளையாட்டுகள் பற்றிய கட்டுரையும் இவ்விதழில் இடம் பெற்றுள்ளன.

கல்வெட்டு காலாண்டிதழ் வரலாற்று ஆய்வாளர்களுக்கும், ஆர்வலர்களுக்கும், ஆய்வு மாணவர்களுக்கும் பெரிதும் பயன்படும் எனக் கருதுகிறேன்.

**க. அசோக் வர்தன் ஷெட்டி, இ.ஆ.ப.**

# RECENT EPIGRAPHICAL DISCOVERIES IN PANDYA REGION

1

**C. Santhalingam**
Archaeological Officer, Madurai

Pandya region has been explored already by the pioneer scholars of archaeology and many a number of materials have been published so far. But still some unexplored areas are left and they are yielding much interesting evidences whenever archaeologists pay a visit to such areas. Recently some villages near Kamuthi area in Ramanathapuram district were explored and some interesting early Pandya inscriptions and loose sculptures have been discovered by the archaeologists ot State department of Archaeology.[1] The significancc of these discoveries are discussed below:

## Inscriptions at Ayyanar Temple near Kamuthi

The temple of "Valivitta Ayyanar" is situated on the main road from Kamuthi to Aruppukkottai at three Kilometre distance, Originally there was a Siva temple and in later days it was ruined and then the Ayyanar temple gains importance in the same place. This place was already visited by Epigraphists and one Vatteluthu inscription was noticed and reported in ARE 1974-75/96 This inscription gives only the prasasthi portion of a merchant guild datable to 10th Century A.D.but the main subject matter and the name of this place or temple are lost. In this same temple pricincts an inscribed slab stone is found in our recent visit which reveals interesting informations inconnection with this area. A stone Nandhi sculpture, the only sculptural remains of a Siva temple which existed in the early Pandya period is also found here.

The slab contains inscription on both sides is broken on the right top and hence atleast four scripts in eleven lines are lost. Because of this the name of the king and his regnal year are not able to trace. The inscription on the obverse side starts with "Koccadaya ..... Which cnnfirms this as a Pandyan record. From the existing portions of this inscription it is learnt that the name of this place was Thiruporpunam and the Siva temple existed here was named as Arikesari Isvarm. A devadasi women Solai daughter of Nangai had donated 15 Kasu for a perpetual lamp. The temple preists called Aganalikaiyar accepted this endowment. The interest for this donated 15 Kasu was fixed as one Nali measure of ghee per Kasu per month and by this 15 Nali of ghee was collected per month. Only by this ghee the lamp was maintained lost long. This Inscription consists totally 25 lines, the first 20 lines are engraved on the obverse side of the stone, the rest five lines are engraved on the reverse side.

Below this another inscription is engraved which gives the name of the King Madurai konda Parakesari (ie) Parantaka Chola - I (907 - 953 A.D.) Since the stone is broken as already told the regnal year of this Chola king also is not able to trace But by the available scripts the date may be surmised around 930 A.D. In this inscription it is mentioned that for the merit of Dhandi Srithongan, an individual Devan Senthan Iraiyan donated 30 gold coin from the month of Panguni (March-April) The purpose of the donation is not known because the inscription is left incomplete. The village name (Thiruporpunam) and the presiding diety (Arikesari Isvarathu Mahadever) are one and the same as mentioned in the previous inscription. The name of a nadu division is mentioned in this inscription but it is also damaged, still some how it can be identified as poliyur nadu which represent Kamuthi and Parthibanur

area.[2] This village Thiruporpunam was formed part of poliyur nadu. Now this village was completing ruined.

These two inscriptions could be treated as very important because of its location and the information they reveal. Arikesari Isvaram is named after the early Pandya king Maravarman Arikesari (650-700 A.D.) who was the contemporary of Saint Thirugnanasampandha. He is well known from Velvikudi grants and Vaigai bed inscription. Though the date of the inscription may be assigned to 10th c.A.D. on its paleographical grounds, we can surmise that the Siva temple might have existed from 7th c.A.D. and flourished atleast upto 13th c.A.D. One more 13th c.A.D. fragmentary inscription is also found in this place.

The village Thiruporpunam is located in the ancient trade route between Srilanka to ruiner heartland of Pandya region particularly modern Aruppukkottai region. Aruppukkottai was also a trade centre during 13th c.A.D. where Valanjiyar from Southern Cyloner (தென்னிலங்கை வளஞ்சியர்) were settled and engaged in their trade activities[3] The ancient name of Aruppukkottai is mentioned in the inscriptions as Sengattivukkai Idathuvali.

More than one land route existed to reach east coast from Aruppukkottai, one among them was through Kamuthi. In between Aruppukkottai to Kamuthi so many historical evidences are noticed which give clues to the existance of ancient trade route in this region. At many places the ancient roads are named as Mantapasalai (Mantapam the town near Ramanathapuram) and Mangamma Salai (named after Madurai Nayak queen Mangamma) and so on.

No doubt these roads were the ancient roads which linked Ramesvaram (Mantapam) and Aruppukkottai through Kamuthi. Even the present day road to Ramanathapuram

is laid parelel to ancient one. Not only, that number of temples had been built on thts ancient road side. They are traced out and ancient settlements were known by the inscriptions found in this area.

The existance of a Vishnu temple was known by the discovery of a stone Vishnu sculpture standing about 6 height at Kallurani village just 10 kms. distance from Aruppukkottai to Kamudhi. But the temple was completely ruined. This sculpture may be dated to c.A.D. In this same village an ancient road loads eastward (To Kamuthi) even today and it is called as Mangammal Salai.

Another just 5kms from here (Kallurani) there was a Siva temple and a Chaturvedimangalam during 13th c.A.D. but now it was completely ruined. These evidences were also discovered in our recent survey at Maravar perungudi village which yielded two inscribed sculptures

Within next 10 km. distance there were two ancient villages viz. Punakulamangalam and Kalisayamangalam very near to modern Neeravi vIllage. Three Vatteluthu inscriptions are discovered from this place Neeravi[4] One was a herostone inscription dated to 10th c.A.D. which gives the name Kalisaya-mangalam. Another one Vatteluthu inscription was dated to the 18th regnal year of the king Veera Pandya (965-985) (who took Chola's head). From this inscription we came to know about the existance of a Siva temple in this place. In our recent Survey an inscribed Nandhi Sculpture was noticed in this place. The inscription is engraved in 10th c.A.D. Vatteluthu script which reveals that this Nandhi was placed by one Kooththadi Santhan who was awarded with Kavithi title. Very near to this temple an ancient road leads towards east (to Kamuthi) named as Mangammal Salai. The modern village name Neeravi has its ancient connections with merchantile group Peru Niraviyar. This surmise is

made only on the basis of similarity in the name. More over the discovery of a gold coin with the legend "Uraga" datable to 11th c.A.D., at this place also strengthens the trade activities existed in this region. The distance between this village Neeravi and the present day Ayyanarkoil where Arikesari Isvaram was located is just 7 kms.

By these new discoveries the micro region between Kamuthi and Aruppukkottai brought under new light. The close accession between each village and the trade links between Srilanka to this Aruppukkottai region are proved beyond doubt. At every five kilometres there was a historical antiquity in this area. Still more evidences remain unearthed in this dry region. It all of them are properly surveyed and evidences are taped many missing links will be brought out.

---

1. The author of this paper and Mr. P. Rajendran epigraphist, Madurai were jointly explored this area.
2. This information was got from Dr. V. Vedachalam, Epigraphist, Madurai.
3. Avanam 12. Journal of Tamilaka Tholiyal Kazhakam p. 53
4. Avanam Vol. 2.

**கமுதி - வழிவிட்ட அய்யனாரர் கோயில் கல்வெட்டு**

I 1. ஸ்வஸ்திஸ்ரீ கோச்சடை......
2. குயாண்டு ....
3. ம மாண்டு கும்ப ஞா ...
4. லாக திருப்பொற்பு ....
5. அரிகேஸரி ஈஸ்வரத் ....
6. ர்க்கு நொந்தாவிளக்கு ....
7. கு இவ்வூர் தேவனா ...
8. நங்கை ஆயின திரு ....
9. மகள் சோலைப் பிராட் ..

10. . . . ற்றி வைத்த நிறைகு . . . .
11. ழங்காசு பதினைந் . . .
12. காசினால் காசின் வாய்த்திங்
13. கள் நாழி நெய்ப்பொலி யாக
14. த் திங்கள் பதினைந் நாழி
15. நெய்யாலும் நிசதிப்ப
16. டி உரிய் நெய்யால் ஒரு நொந்
17. தாவிளக்கு முட்டாமே எரி
18. ப்பதாக இற்றளிஇல் அக
19. நாழிகையத்தக்கு நெய்பொ
20. லி ஊட்டாக குடுத்தன . .

**பின்பக்கம்**

21. . . . . . கு எரிக்க அக நா
22. . . . . ழி குடுத்த நி
23. . . . . சு செம்பி நால் வி

II 1. (ம) திரை கொண்ட கோப்ப
2. . . . . ன்மக்கு யாண்டு இ
3. . . . டாவது இவாண்டு
4. (பொழி)யூர் நாட்டு திருப்
5. பொற் புனத்து அரிகே
6. சரி ஈச்சரத்து மாதேவ
7. ர்க்கு பங்குனித் திங்கள் மு
8. தலாக தண்டிசிரி தொங்க
9. னைச் சாத்தி இவ்வூர் படைதே
10. வன் சேந்தன் இரையான் அரி
11. கேசரி ஈச்சுவரத்து மாதேவர்
12. க்குப் (பொன்) அட்டு முப்பது மாதே
13. வர் பக்கல் சேந்தன் ஸ்ரீ.

# 2 Martial Arts of Tamilnadu

**M. Chandramoorthy**
Registering Officer, Chennai

From time immemorial the Tamils were well known for their expertise in various martial arts. These descriptions were devised by our forefathers to enable the youths to develop strengtn of mind and body. It is regrettable that by the efflux of time patronage for the ärts has dwindled and only in rural areas the arts are still popular. The Government and the people would do well to revitalise them. The following brief descriptions of some of the important martial arts will be useful to those who are interested in knowing them.

Among the various old games of skill and bravery are still popular in the rural areas Silambam or staff fight occupies a prominent position. This Martial Art was originally practised with bamboo sticks and later on steel swords and shields were also used. Even now several youths learn this sport from competient teachers and exhibit their prowess during demonstration before the public.

This sport is called variously as Silambam' 'Kuchi Vilaiyattu', and 'Kambu Vilaiyattu' The bamboo staff that is commonly used in this sport measures 5 feet in length. Before commencement of this sport, the combatants pay respectful salutations to the teacher and to the four quarters. Of the various modes of attack, the following namely 'Aiyankal' 'Kalaikkittu' 'Melkattiri', 'Kilkattiri', 'Panaiyeri mallu', 'Thulukka vanam' and 'Padai virattu' are important.

Generally two persons opposing each other swirl their sticks in this game. On several occasions, one person is

surrounded by many opponents on all sides, when the attacked central person deals effectively with the attackers.

This sport is now being given a fillip among the people of Tamilnadu after efforts made for revitalising it in the 5th world Tamil Conference held at Madurai.

**Kurunthadi**

This sport is played by means of short bamboo sticks. This sport is called by other names as 'Podi varisai' 'Sedi kuchi' and 'Siramam'. According to the manuscript verses the length of the stick described as 'Irandu San Nangu viral Iru Ottai'.

From the beginning to end every stroke of this sport is played according to the background musical score of musicians and drummers. Each stroke is directed against a particular part of human body (Varmam) and each stroke is defended competently by the performers.

One particular locking feature goes by the name lock and release. This sport is the forerunner to the sword fight. Although this sport is spread throughout Tamilnadu - Kanyakumari District specialises this sport.

**Surul Veechu**

Highly tempered woodz steel sheets was another important martial weapon of Tamils. It is more than 5 feet length with breath of 2 to 3 centimetre and will round up as a coil. This weapon is called 'Surul' or 'Surul Katti' and the sport is called 'Surul Veechu'.

One can keep his foes at a distance by swift action. That is by using it the fighter can forestall the attempts of his enemies and keep them 5 to 10 feet away.

This is one of the instruments of self defence. Violent sparks emanate during action. Experts in this sport try to smear sandal paste from their body to that of the opponent without inflicting any bodily injuries which itself is an intricate art. It is a feast to be believed. This sport is also called as 'Urumi'.

## Valari Veechu

Valari a native type of Boomarang was very famous in the the Medieval period. And this was continued in use upto very late period of 18th century in the southern Districts of Tamiluadu. This perticular weāpon is highly valuable to resist the onword rushing of cavalry. This valari was usually made up of wood, Ivory or iron. We have specimens of wood, iron and Ivory in Pudukottai and Ramnad Museums.

## Adithadai

This sport is an art of defending with bare hands the onslaught of the adversary who uses various implements like sickle, sword and battle axe.

On certain occasions the defender snatches the armaments from the opponent and their reles are reversed which is a regular feature. In this sport combatants use their skill in locks.

## Madu

Two horns of the deer joined in opposite direction is used in this sport. In ancient days the people of 'Mullai' region patronised this sport. In later days this sport found their votaries in kings of Sivaganga, Ramnad Sethupathi, Thondaiman of Pudukkottai and Maratta of Tanjore. This sport is also called as 'Maduvu' and 'Man Kombu' etc. with this implement one can tackle effectively an opponent who is wielding 'Silambu'.

## Kaliyal

In this sport small and big bamboo sticks are stroked by twelve players to the rhythmic musical notes sung by musicians. Besides the usual bamboo stroke play the participants strike with their hands with each other and lock and throw them away.

## Theeppandham

Flaming torches are held upright and waved rhythmically and this sport is called 'Theeppandham Vichu'. The movements are akin to those obtained in 'Silambam' This sport has several divisions as 'Orrai Kaivichu' 'Irattai vichu'. Theeppandam and Veedhi Varisai.

## Kaippandham

This sport finds favour among the people during festival time and is anacted during night.

Another intricate feature is that of swirling a set of bamboo sticks without causing any burns to the body.

## Puliyattam

The performer is dressed as a tiger and he dances to the background score of drummers. Another man attacks the tiger with a bamboo stick. To avoid the bamboo strokes the tiger man dodges the attacker by tactical with drawals and pounces at a later time. The tiger man plays with 'Maduvu' and the attacker with Silamboo. This sport is reminiscent of ancient Tamils fight against the tiger.

## Kalai Kuthu

This Is an art of balancing on tight ropes by holding a bamboo stick. A bamboo stick measuring 15 feet in length is balanced delicately on ths tip of the fore-finger·

on the lips, on the stomach, on the chin, on the nosetip, on the fore head, on head, on teeth and on the palm.

Acrobatic forward and backward somersaults picking up of coins strewn on the towel by lips. holding the two hands backward, and somer saulting without falling on the ground, performing on the rings and flame rings, burying ones head on the ground remaining upside down for a time of 15 minutes and various tricks using top, form part of this sport.

## Ramfight

Two rams dash against each other. Besides ram, fine breeds of goat are also trained for this fight This sport is enacted on select grounds and theresult is arrived. It is one of the very popular sports among the Tamils. The rams are selected and paired on the basis of age and of teeth formation. This sport is judged in the smash counts and on the withdrawal of the rams.

## Cock Fight

This sport (finds mention) in Sangam classics and in popular from the days of the Sangam till date Cocks are reared meticulously specially for this fight. The nails are grown sharp and the fight is carried out with or without knifes which are tied to their legs. In the fight without knives less of cock's life is ruled out. Those rearing the battle cocks are called 'Seval Katti.

3

# Rules for Sculpting the Jaina Statues in Ancient Tamil Soil

**Dr. S. Soundarapandian**
Curator
Government Oriental Manuscript Library and
Research Centre, Chennai-600 005

Manasara, a Sanskrit Silpa treatise, delineates hard and fast rules to make the idols of Jaina prodigies, both for worship at sanctum sanctorum and for procession, such as Sukanda, Jina, Arha, Suparsvan.

Manasara was nothing but a handbook of the Visvakarmas who sculpted idols in Tamilnadu. Though this book is in Sanskrit, the gamut of vocubulary leads us, easily, to think that these silpa rules had been contemplated only by Tamils.

And in fact, Tamil land was the birthplace for Chiselling stones into various vigrahas.

Even in 7th Century B.C., the idol making was at its peak; this can be articulated with evidence that a mother goddess metal statue had been a discovered at Aticcanallur, in Tirunelveli, District.

So even before this point of time, Tamils must have flourished in sculptures, it can be swimmingly surmised.

So, what Manasara describes is the description of the backdrop of ancient Tamil country.

The fact that Manasara deals with Saiva, Jaina and Buddha Vigrahas, itself clearly tells us that in those days, during the

period of Manasara which can be assigned between 9th century A.D. to 11th Century A.D. on the basis of Tamil technical terms and customs, all the three religions (Hindu, Jaina, Buddha) were in vogue in Tamil land.

Let us now list the technicalities for Jaina 'murthies' as put forth in Manasara :-

(1) The swami possesses two eyes, two hands and one head without hair.

(2) Swamy can either stand or sit.

(3) The sitting posture should be made erect with an expression of deep yoga.

(4) The idol should be on the seat which is supported by two lions.

(5) At the back, a 'Kalpaka' tree should be depicted.

(6) At one side, sages like Narada and other gods will be standing.

(7) Indira, the fanners, the Yakshas and Kubera also will stand.

(8) No jewel, no dress will be found on statues.

(9) In Chest, a golden mole called 'Srivasta' will be found.

(10) On either side of the door, Sanda and Maha Sanda will be guarding.

Following these tenets, the 24 Thirtangaras, Chittati Sukanda, Jina, Arha and Suparsvan had been Chiselled in stones, says Manasara.

# கீழ்க்குறிச்சி பௌத்தப்பள்ளிக் கல்வெட்டு

4

கி. ஸ்ரீதரன்
உதவி கல்வெட்டுக் கண்காணிப்பாளர்
சென்னை

திருச்சிராப்பள்ளி நகருக்கு தென்கிழக்கே பொன்மலையை அடுத்து, சுமார் 10கி.மீ தொலைவில் கீழ்க்குறிச்சி என்ற ஊர் அமைந்துள்ளது. இவ்வூரில் பௌத்தப்பள்ளிக்கு அளிக்கப்பட்ட நிலக் கொடை பற்றிய கல்வெட்டும், புத்தர் சிற்பமும் அண்மையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

கிழ்க்குறிச்சி கிராமத்தில் ஒரு வயலின் வரப்பில் 1 மீட்டர் 50 செ.மீ. உயரமும் 50 செ.மீ அகலமும் உடைய செவ்வக வடிவக் கல்தூணில் கல்வெட்டும் அதன் கீழே மங்கலச் சின்னங்களும் பொறிக்கப்பட்டு காணப்படுகின்றது.

கல்லின் கீழ்ப்பகுதியில் பூரண கும்பமும், அதன் இருபுறமும் விளக்குகளும் காணப்படுகிறது. அதற்கு மேலே கத்தியும், வில்லும், தர்மசக்கரமும் பொறிக்கப்பட்டுள்ளன. மேலும் உடுக்கை வடிவினில் பசும்பையும், கலப்பையும் காணப்படுகிறது. அதற்கு மேலே சாமரங்களும் அதன் நடுவே குடையும் காணப்படுகிறது. ஒரு பக்கத்தில் காணப்படும் மேற்கண்ட மங்கலச் சின்னங்கள் அனைத்தும் கல்லின் நான்கு புறங்களிலும் காணப்படுவது சிறப்பாகும். இதற்கு மேலே கல்வெட்டு ஒரு பக்கத்திலிருந்து தொடங்கி தொடர்ச்சியாக வருமாறு பொறிக்கப்பட்டுள்ளது.

**கல்வெட்டு**

ஸ்வஸ்திஸ்ரீ வீரதாவளத்தில் பௌத்தப்பள்ளிக்கு இந்த செந்தாமரைக் கண்ணநல்லூர் முதலடங்க இறையிலியான பள்ளிச்சந்தம்

வீரத்தாவளம் என்பது வணிக வழியில் அமையும் வணிகர்களின் தங்குமிடமாகும். வணிகர்கள் தங்களுக்கு என்று பாதுகாப்புப் படையையும் கொண்டிருந்தனர். பொன் மற்றும் விளைபொருள் தொடர்பான வணிகர்களைக் குறிக்க பசும்பை, கலப்பை ஆகியவை தமிழகத்தில் பல இடங்களில் கல்வெட்டில் குறிக்கப்படுகின்றன.

அவர்களது படையைக் குறிக்க வாள், வில் ஆகிய படைக் கலன்களும் காணப்படுகின்றது.

அவ்வகையில் இக்கல்வெட்டு காணப்படும் இடம் வணிகர்களின் வீரத்தாவளமாக விளங்கியிருக்கிறது. வணிகர்கள் இங்கு அமைந்திருந்த பௌத்தக் கோயிலுக்கு (பள்ளிக்கு) செந்தாமரைக் கண்ணநல்லூர் என்ற இவ்வூரினை வரி நீக்கித் தந்துள்ளனர் என்பதையும் அறிய முடிகிறது. செந்தாமரைக் கண்ண நல்லூர் என்று அழைக்கப்பட்ட ஊர் இன்று கீழ்க்குறிச்சி என அழைக்கப் படுகிறது.

கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ள தூண் அருகில் 11-ம் நூற்றாண்டைச் சேர்ந்த புத்தர் சிற்பம் காணப்படுகிறது. கால்களை மடக்கி பத்மாசனத்தில் அமர்ந்து கைகளை தியான நிலையில் வைத்துக் கொண்டுள்ள அமைப்பில் சிற்பம் காணப்படுகிறது. இச்சிற்பத்திற்கு தலைப்பகுதி இலலை.

பௌத்தப்பள்ளி எனக் குறிப்பிடுவதால் இங்கு பௌத்தக் கோயில் இருந்து காலப்போக்கில் அழிந்திருக்க வேண்டும் என்பதை ஊகிக்க முடிகிறது. இப்பகுதியில் தற்பொழுது வேளாண்மை நடைபெற்று வருகிறது.

திருச்சிராப்பள்ளி மாவட்டம் மற்றும் அதன் அண்மை மாவட்டங்களான கரூர், பெரம்பலூர் மாவட்டங்களில் பண்டைய வணிக வழிகளில் புத்தர் சிற்பங்கள் அமைந்திருப்பதைக் காண முடிகிறது. முள்ளிக் கரும்பூர், பேட்டைவாய்த்தலை, வெள்ளனூர் அரியலூர், ஜெயங்கொண்டம், விக்கிரமங்கலம் போன்ற ஊர்களில் புத்தர் சிற்பங்கள் காணப்படுகின்றன.

இடைக்கால வணிகம், மற்றும் பௌத்த சமயம் பற்றிய வரலாற்று ஆய்வுக்கு கீழ்க்குறிச்சியில் காணப்படும் கல்வெட்டு முக்கிய சான்றாக அமைகிறது.

---

1 இக்கல்வெட்டு குறித்து தகவல் அளித்தவர் திரு. சுபாஸ் சந்திரபோசு - தொல்லியல் ஆர்வலர் - திருச்சி.

2. கல்வெட்டு ஆய்வுக்கு உதவியவர்கள் : திரு. வே. இராமன் ஸ்தபதி, திரு. ப. இராசேந்திரன் அலுவலக உதவியர், திருச்சி.

# 5

# வாழைத் தோட்டம் கன்னடக் கல்வெட்டு

**முனைவர் இரா. ப. கருணானந்தன்**
காப்பாட்சியர், கோவை

வாழைத்தோட்டம் என்ற இவ்வூர் நீலகிரி மாவட்டம் கூடலூர் வட்டத்திலுள்ளது. இவ்வூரில் உள்ள புதர் ஒன்றில் கல்திட்டை வடிவத்திலுள்ள நடுகல் ஒன்று கண்டு பிடிக்கப்பட்டது. இந்நடு கல்லில் கன்னட மொழியில் கல்வெட்டுப் பொறிக்கப்பட்டுள்ளது. புலியுடன் போரிட்டு அதனைக் குத்திக் கொன்று வீரமரண மடைந்த வீரன் ஒருவனுக்கு இந்நடுகல் எடுக்கப்பட்டுள்ளது. கிழக்குப் பார்த்த நிலையிலுள்ள இந்நடுகல் மூன்று அடுக்குகளைக் கொண்டிருக்கிறது. முதல் அடுக்கில், வீரன் புலியுடன் போரிட்டுக் கொண்டிருக்கிறான். இரண்டாம் அடுக்கில், தேவ மகளிர் இருவர் வீரனை தேவலோகத்திற்கு அவ்வீரனின் இருகரங்களையும் பற்றி அழைத்துச் செல்கின்றனர். மூன்றாம் அடுக்கில்; சிவலிங்கம், நந்தி, பூசாரி முதலியோர் உள்ளனர். இக்காட்சியில் சிவலோகம் சித்தரிக்கப்பட்டுள்ளதால் வீரமரணம் அடைந்த வீரன் சிவலோகப் பதவியடைந்தான் என்பதை உணர்த்துகிறது.

இந்நடுகல்லின் தெற்குப் பகுதியில் கன்னட மொழியில் எழுத்துப் பொறிப்புகள் காணப்படுகின்றன. அதில் சக வருடம் 1003-ல் வீரச்செயல் புரிந்து வீரமரணமடைந்த கேத்த கவுண்டரின் நினைவாக அவரது மகன் சண்ண கேத்த கவுண்டர் என்பவர் இந் நடுகல்லை அமைத்தார் என்ற செய்தியைக் காண முடிகிறது. சக வருடம் 1003 என்பது கி.பி. 1081க்கு சமமான ஆண்டாகும்.

இந்நடுகல் தனிக்கல்லாக இல்லாமல் சிறிய கோவில் வடிவில் இருக்க வேண்டும் என்பதற்காக கல்திட்டை வடிவில் அமைக்கப் பெற்றுள்ளது. கோவில் மரபைப் பின்பற்றி கிழக்குப் பார்த்த நிலையில் இந்நடுகல் அமைக்கப்பட்டுள்ளது. காட்டுப் பகுதியில்

வாழ்ந்தாலும் அப்பகுதி மக்கள் சைவம் போன்ற மதக்கோட்பாடு களை அறிந்திருந்தனர் என்பதை நடுகல்லில் உள்ள சிவலிங்கம் உணர்த்துகிறது.

## கல்வெட்டு

### Translitration

1. Svasti Śrī Śakha Sā 1003 [.ˊ]ya va
2. sandtti Sidharthi samvach.
3. radha Ba 1 lu Śrīmatu Si .
4. dha Kētagaṇḍana maga sa
5. ṇṇahaketa - gaṇḍanu tamnu.
6. li Keta-gaṇḍage huyīsida [Vī]
7. ragalu Śrī Srī Śrī Śrī Śrī

### Translation

Be it well. In the śaka year 1003, Sidharti Ba. 1, Saṇṇa Kētagaṇḍa son of Kētagaṇḍa installed a hero-stone in memory of Kētagaṇḍa at . . . . .

---

* In the beginning of each line in the inscription there is a cifar or decoration and in the end of each line a letter or letters are unseen on account of wall.

அடிக்குறிப்பு

இந்நடுகல்லை கண்டறிந்து வெளிப்படுத்தியவர் உதகையி லுள்ள அகில இந்திய வானொலியில் பணி புரியும் அலுவலர் திரு. மோகன் அவர்கள்.

இக்கன்னடக் கல்வெட்டினை படித்துத் தந்தவர். மைசூரி லுள்ள மத்திய தொல்லியல் துறையைச் சேர்ந்தகல்வெட்டாய் வாளர் திரு. சுவாமிநாதன் அவர்கள்.

# 6 அச்சந்திரம் - கல்வெட்டுகள்

முனைவர் ஆ. பத்மாவதி
கல்வெட்டாய்வாளர், சென்னை

தருமபுரிமாவட்டம் ஓசூர் வட்டத்தில் உள்ள ஊர் அச்சந்திரம் . . இவ்வூரில் மிகவும் இடிபாடுள்ள நிலையில் ஒரு கோயில் உள்ளது. இக்கோயில் அதிட்டானம் [Base] மட்டுமே காணப்படுகிறது. சில தூண்கள் சாய்ந்தும் சாயாமலும் நின்று கொண்டிருக்கின்றன. இக்கோயிலின் அதிட்டானத்தின் மூலை களில் நான்கு தமிழ் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இக் கல்வெட்டுகள் இவ்வூர் அத்தி சமுத்திரம் என்றும் இவ்வூரிலுள்ள கோயில் இறைவன் திருவத்தியூர்ப் பெருமாள் என்றும் கூறுகின்றன. ஆதலால் இவ்வூரின் பழைய பெயர் திருவத்தியூர் என்றழைக்கப்பட்டிருக்கிறது பின்னர் அத்திசமுந்திரம் என்று வழங்கப்பட்டிருந்தது. அத்திசமுத்திரம் என்ற பெயர் மாற்றத் திற்கு முன்னரே இவ்வூரில் பெருமாள் கோயில் கட்டப்பட்டிருக் கிறது. அதனால்தான் அக்கோயில் திருவத்தியூர் பெருமாள் என்றழைக்கப்பட்டிருக்கிறார். தற்போது இக்கோயில் அனுசகிரி திம்மராய சுவாமி கோயில் என்றழைக்கப்படுகிறது.

திருவத்தியூர் அத்திசமுத்திரமாக மாறிய பின்னர் மக்கள் வழக்கில் இவ்வூர் தற்போது அச்சந்திரம் என்ற பெயரில் அழைக்கப்பட்டு வருகிறது. கோயிலுக்கு அடுத்த தென்புறத்தில் அத்திசமுத்திரம் என்ற பெயரில் ஏரி ஒன்றும் உள்ளது.

இங்கு கிடைத்துள்ள இரு கல்வெட்டுகள் மூலம் கண்ணி மங்கலத்தைச் சேர்ந்த ஒருவன் இக்கோயிலுக்கு விளக்கெரிக்க பத்து பணம் கொடுத்த செய்தியும், அதனைப் பெற்றுக் கொண்டு அதன் வட்டி கொண்டு நம்பிமார்கள் விளக்கெரிக்க ஒப்புக்கொண்டு அப்பணியை நிறைவேற்றினர் என்ற செய்தியும் தெரிய வருகிறது.

இக்கோயிலில் விளக்கெரிக்க மேலும் இருவர் பொன்னும் பணமும் அளித்த செய்தியும் தெரிய வருகிறது. இக்கோயிலில் வழிபாட்டுப் பணியைச் செய்து வந்தவர்கள் நம்பிமார்கள் என்றழைக்கப்பட்டனர் என்பதும் தெரிய வருகிறது. நான்கில் இருகல்வெட்டுகள் ஒரே செய்தியைத் தெரிவிக்கின்றன. இக்கல் வெட்டுகளின் எழுத்தமைதி கி.பி. 14-ம் நூற்றாண்டைச் சேர்ந்தது எனலாம்.

## கல்வெட்டுகள்

### 1. அனுசகிரி திம்மராய சுவாமி கோயில் அதிட்டானத்தின் கிழக்கு முப்பட்டைக் குமுதம்

1. ஸ்வஸ்திஸ்ரீ [க]ண்ணி மங்கலத்திலிருக்கும் மா நண்டன் சோ
2. க்கி தே[வர்] மகன் செம்பி தெவன் அத்தி சமுத்தி ரத்தில் திருவத்தி
3. யூர்(ற்) பெ[ருமா]ளுக்கு திருவிளக்கேற்றி குடுத்த பணம் பத்து இப்ப
4. ணம் ப[த்தி]ல் பொலிசை கொண் டேற்ற கடவேன் நம்பி மாரே
5. ன் சந்தி ராதித்த வரை

### 2. அதிட்டானத்தின் மேற்கு முப்பட்டைக் குமுதம்

1. ஸ்வஸ்திஸ்ரீ கண்ணி மங்கலத்திலிருக்கும் சொக்கி தேவர் மகன் மாதேவனேன் அத்தி சமுத்திரத்தில்
2. திருவத்தியூர்ப் பெருமாளுக்கு ஒரு சந்தி விளக்கெரிப்ப தாக நம்பிமார் வச்சதில்(க்) குடுத்த பணம் பத்து இ[பத்]தில் பலிசை கொண்டு சந்திராதி[த்த]*வரை விளக்கெரி[க்க]* கடவர்.

### 3. அதிட்டானத்தில் கிழக்கு முப்பட்டைக் குமுதம்

1. ஸ்வஸ்திஸ்ரீ யுவ(வ) **சம்வத் சரத்து** வைகாசி மாத முதல் முகுளி பள்ளியிலிருக்

2. கும் தசபாண்டை பெண்டிராட்டி [த]ச பாண்டை யேன் நாயநார் திரு
3. வத்தியூ(யூ)ர் பெருமாளுக்கு சந்திவிளக்கு ஏற்றக் கடவதாக ஒரு பொன் பண்
4. டாரத்திலே குடுத்தேன் இவ்விளக்கு சந்திராதித்த வரை செல்லக் கடவது.

**4. அதிட்டான முப்பட்டைக் குமுதம் கிழக்கு தெற்குப்புறம்**

1. ஸ்வஸ்திஸ்ரீ கங்காண்டை நாபன் அதகமான் அத்தி சமுத்தி[1] ரத்தில் திருவத்தியூற் பெருமாளுக்கு
2. கண்ணிமங்கலத்து ஜயங்கொண்ட வேளாண் மாரகப னேன்[2]குடுத்த பணம்ய இப்பணத்து பொலிசையா(ல்)
3. சத்த வரை[3] திருவிளக்கேற்றக் கடவேன் நம்பியா ரேன் இப்படி அறிவோம் **மகா சபையோம்.**

---

1. அதிகமான் என்று வாசிக்கவும்
2. மாரகபனேன் என்று வாசிக்கவும்
3. சந்திராதித்த வரை என்று வாசிக்கவும்

# 7 முகப்பேறு ஆய்வு

**சீ. இராமச்சந்திரன்**
கல்வெட்டாய்வாளர், சென்னை

முகப்பேறு, திருவள்ளூர் மாவட்டம் அம்பத்தூர் வட்டத்தில் அடங்கிய ஊராகும். அண்ணாநகரின் வடமேற்கே 3 கி.மீ. தொலைவில் முகப்பேறு அமைந்துள்ளது. மேற்கு முகப்பேறு ஊரில் வேளாளர் தெரு என வழங்கப்படும் பகுதியில் சந்தான சீனிவாசப் பெருமாள் கோயில் எனப்படும் திருமால் கோயில் உள்ளது. அண்மையில் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையினரால் இக்கோயில் ஆய்வு செய்யப்பட்டது.[1] இக்கோயிலிலிருந்து மூன்று கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டன.

இக்கோயில் வேசர விமானத்துடன் கூடிய பெரிய கோயிலாகும். பிரஸ்தரம் வரை கருங்கல்லாலும் அதற்கு மேலே செங்கல் மற்றும் சுதையாலும் கட்டப்பட்ட இக்கோயில் பலமுறை புதுப்பிக்கப் பட்டுள்ளதால் கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ள கற்களும் இடம் மாறியும் தனித்தனிக் கல்வெட்டுத் துண்டுகளாகவும் உள்ளன. இக்கோயிலிலிருந்து 2 பர்லாங் தொலைவில் மார்க்கண் டீஸ்வரர் கோயில் என வழங்கப்படும் அண்மைக்காலச் சிவன் கோயில் உள்ளது. சந்தான சீனிவாசப் பெருமாள் கோயிலில் கல்வெட்டுகள் இடம் மாற்றிப் பொருத்தப்பட்டிருப்பினும், கோயிற் கட்டடக் கலையமைப்பு நேர்த்தியான முறையிலேயே இருப்பதால் இது பழமையான கோயிலே எனத் தெரிகிறது. தூண்களில் புஷ்பபோதிகை அமைப்பின் தொடக்க நிலை காணப் படுவதாலும், யாளி வரியில் இடம் பெற்றுள்ள யாளி உருவங்களின் உருவமைதியைக் கொண்டும் இக்கோயில் கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டிருக்க வேண்டும் என முடிவு செய்ய இயல்கிறது. கோயில் கருவறையின் வடபுற வெளிச் சுவரில் (வேதிகைப் பகுதியில்) கோயில் கட்டுமானத்திற்குப் பயன்படுத்தப் பட்ட அளவைக் கோலின் குறியீடு பொறிக்கப்பட்டுள்ளது. + — என்ற குறியீடுகளால் குறிப்பிடப்பட்டிருக்கும் இதன் நீளம் 11 அடியாகும்.

**கல்வெட்டுச் செய்திகள்**

இக்கோயிற் கல்வெட்டுகள் மூன்றுள் ஒன்று, கி.பி. 13-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஆட்சி புரிந்த தெலுங்குச் சோழ அரசன் விசய கண்டகோபாலனின் துண்டுக் கல்வெட்டாகும். கி.பி. 13-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியைச் சேர்ந்ததாகக் கருதத் தகும் பாண்டிய மன்னன் சடையவர்மன் சுந்தரனின் கல்வெட்டு, இரண்டு தனித்தனித் துண்டுக் கல்வெட்டுகளாக வெவ்வேறிடத்தில் வைத்துக் கட்டப்பட்டிருப்பினும், இணைத்துப் படித்தால் பொருள் தொடர்ச்சி கிடைக்கும் வகையில் முழுமையாக உள்ளது. மூன்று தனித்தனித் துண்டுகளாக வெவ்வேறிடங்களில் பொருத்தப்பட்டிருக்கும் விஜயநகர அரசர் வீரதேவ மகாராயரின் கல்வெட்டு முழுமையின்றி உள்ளது. இவரது கல்வெட்டில் ஆனந்த வருடம் குறிப்பிடப்படுகிறது. இவ்வரசர் அருணகிரிநாதரால் பிரபுடதேவ மாராயன் எனக் குறிப்பிடப்படும் இரண்டாம் தேவராயர் (கி.பி. 1422-47) எனக் கொள்வது பொருத்தமாகும். எனில் இக்கல்வெட்டு கி.பி. 1436-ஆம் ஆண்டில் பொறிக்கப்பட்டிருக்க வேண்டும்.

கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் இவ்வூர் "ஜயங்கொண்ட சோழ மண்டலத்துப் புழற்கோட்டத்து அம்பத்தூர் நாடு" என்ற வருவாய் நிர்வாகப் பிரிவிலடங்கியிருந்தது. தொண்டை மண்டலம் என்ற பழமையான அரசியல்-புவியியல் அமைப்பே, சோழப்பெரு மன்னர்கள் ஆட்சிக் காலத்தில் ஜயங்கொண்ட சோழ மண்டலம் எனப் பெயர் பெற்றிருந்தது. இன்றைய சென்னை நகர, புற நகர்ப் பகுதிகள் அக்காலத்தில் புலியூர்க் கோட்டம் என்றும் பெயர் பெற்றிருந்த இரு கோட்டங்களில் அடங்கியிருந்தன. முதற்குலோத்துங்கன் மற்றும் விக்ரம சோழன் ஆட்சிக் காலங்களில் (கி.பி. 1070 - 1135) புலியூர்க்கோட்டம் என்பது குலோத்துங்க சோழ வளநாடு என்றும், புழற்கோட்டம் என்பது விக்ரம சோழ வளநாடு என்றும் பெயர் மாற்றம் பெற்றன. சோழர்களுக்குப் பின்னர் தமிழகத்தையாண்ட பாண்டிய மன்னர்களும் அதன் பின்னர் ஆட்சிக்கு வந்த விஜயநகர வேந்தர்களும் இப்பெயர் மாற்றத்தினை ஏற்றுக்கொண்டு பின்பற்றினர்.

கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் இக்கோயில் கட்டப்பெற்றபோது இவ்வூரின் பெயர் "விசைய நுளப்பியாறு" என்பதாகும். கோயில் இறைவனின் பெயர் "இளந்திரு வேங்கடமுடையான்" என்று இனிய தமிழ் வழக்கில் அமைந்திருந்தது. "விசைய நுளப்பியாறு"

என்பது இப்பகுதியில் ஓடிய சிற்றாறாகும். இவ்வாற்றின் பெயரே ஊருக்கும் ஆகி வந்துள்ளது. இது காலப் போக்கில் நுளப்பியாறு எனச் சுருங்கி, முளப்பியாறு எனத்திரிந்து, முகப் பேறு என அடையாளந் தெரியாத அளவுக்கு மருவியுள்ளது. முகப்பேறு என்பதை மகப்பேறு எனக் கொண்டு சந்தான சீனிவாசப் பெருமாள் என மொழி பெயர்த்திருககலாம். இப் பகுதியைச் சேர்ந்த முதியவர்கள், இவ்வூரை முளப்பாக்கம் அல்லது முழப்பாக்கம் என்று வழங்குவதும் மேற்குறித்த நமது முடிபுக்குத் துணை நிற்கிறது. முகப்பேறு ஊரையடுத்து நுளம்பூர் என்ற (வருவாய்க் கிராமம்) சிற்றூர் உள்ளது. இவ்வூர்ப் பெயரும் நுளப்பியாற்றுடன் தொடர்புடையதே.[2]

சடையவர்மன் சுந்தர பாண்டியனிடத்துப் பணிபுரிந்த "ஆறை வேளான் அம்பத்தூர் நாட்டு மூவேந்த வேளான்" என்ற பதவிப் பெயர் கொண்ட ஓர் அதிகாரி வழங்கிய கொடை இக்கல்வெட்டில் குறிப்பிடப்படுகிறது. வரந்தருமாள் (வரந்தரும் பெருமாள் என்பதன் மரூஉ ஆகலாம்) என்ற இயற்பெயரும குருகுலராயர் என்ற குடும்பப் பெயரும் கொண்ட அவ்வதிகாரி, இக்கோயிலில் அந்திப்பொழுதில் இரண்டு விளக்குகள் எரிக்கும் பொருட்டு, இரண்டு திருக்குற்றி (குத்து) விளக்குகள் செய்வித்து வழங்கியதோடு. விளக்கு எரிக்கத் தேவையான நெய்க்காக நால்கு பசுக்களையும் நான்கு கிடாரிக் கன்றுகளையும் வழங்கியுள்ளான். கிடாரிக்கன்று என்பது "நாகு" என இக்கல்வெட்டில் குறிப்பிடப்படுகிறது. கோயிலில் பூசைப்பணி புரியும் நம்பிமார்கள், தினமும் அந்திப் பொழுதில் இவ்விளக்குகளை ஏற்றும் பொறுப்பினை ஏற்றனர்.

இரண்டாம் தேவராயரின் கல்வெட்டாகக் கருதத்தக்க கல்வெட்டில் மேதினி மிஸ்ர கண்டன், கட்டாரி சாளுவன் என்ற பட்டங்கள் கூடிய பெம்மைய தெய்வ மகாராசா என்பவர் பெயர் குறிப்பிடப்படுகிறது. கல்வெட்டு முழுமையாக இல்லாததால் அவரது கொடை பற்றிய விவரம் தெரியவில்லை. ஆந்திர மாநிலம் அனந்தப்பூர் மாவட்டத்தில் வடபெண்ணை கரையில் அமைந்துள்ள தாடிபத்ரியில் பெம்மையதேவ மகாராசா என்பவரது பிரிதாபி வருடத் தெலுங்குக் கல்வெட்டு கண்டறியப்பட்டுள்ளது.[3] பரிதாபி என்பது ஆனந்த வருடத்திற்கு இரண்டு ஆண்டுகள் முற்பட்டதாகும். எனவே தாடி பத்ரி கல்வெட்டு, கி.பி. 1434-ஆம் ஆண்டுக்குரியதெனக் கொள்ளலாம். கி.பி. 16-ஆம் நூற்றாண்டில்

தாடி பத்ரியைத் தலைநகராகக் கொண்டு "பெம்ம சானி" என்ற பட்டப்பெயர் கொண்ட கண்டிக்கோட்டை அரசவம்சத்தினர் ஆண்டுள்ளனர் என விஜயநகர அரச வரலாற்றுக் குறிப்புகளால் தெரியவருகிறது. பெம்மைய தேவ மகாராசா என்பவரே இவ்வம்சத்தவரின் மூதாதை என்பதும் அவரது நிர்வாகத்தின் கீழ் தொண்டை மண்டலமும் அடங்கியிருந்தது என்பதும் நாம் ஊகித்தறிந்து கொள்ளமுடிகிறது.

## முகப்பேற்றில் சமண சமயத் தடயம்

சந்தான சீனிவாசப் பெருமாள் கோயில் அமைந்துள்ள தெருவின் ஒரு பகுதியில் கி.பி. 13-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதத்தக்க சமணத்தீர்த்தங்கரர் சிற்பம் ஒன்று உள்ளது. அர்த்த பர்யங்காசனத்தில், கைகளைத் தியான முத்திரையில் வைத்த வண்ணம் அமர்ந்துள்ள தீர்த்தங்கரரின் இருமருங்கிலும் இயக்கர்கள் சித்திரிக்கப்பட்டுள்ளனர். அண்மைக்காலத்தில் சிறிய சன்னிதி ஒன்று எழுப்பப்பட்டு இச்சிற்பம் வழிபடப்படுகிறது. புழற்கோட்டத் தலைநகரான புழல் சமண சமயத் தலமாக இருந்துள்ளது. எனவே இவ்வூரில் சமண சமயத் தடயம் இருப்பதில் வியப்பில்லை.

## கல்வெட்டு எண் 1.

**இருப்பிடம் :** சந்தான சீனிவாசப் பெருமாள் கோயில் அர்த்த மண்டபத் தென்புற வெளிச்சுவர் இரண்டு துண்டுகளாக உள்ளது.

**காலம் :** கி.பி. 13-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியாகலாம் (சடையவர்மன் சுந்தரபாண்டியனின் 13-ஆம் ஆட்சியாண்டு)

**வாசகம் :**

1. ஸ்வஸ்தி ஸ்ரீ கோச்சட பன்மரான திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீசுந்தர பாண்டிய (தே)வர்க்கு யாண்டு ௰௩ - ஜயங்கொண்ட
2. சோழ மண்டலத்துப் புழற் கோட்டமான விக்கிரம (சோழ) வளநாட்டு அம்பத்தூர் நாட்டு
3. விசைய நுளம்பியாற்று இளந்திரு வேங்கட முடையானு (க்குஇ)வ்வூர் ஆறை வேளான் அம்பத்தூர் நாட்டு

4. மூவேந்த வேளான் வரந்தருமாளான குருகுல ராய(ர் ரை)வத்த சந்தி விளக்கு இரண்டுக்கு
5. விட்ட பசு ச நாகு ச ஆக உரு எட்டும் கைக் கொண்டு இத்திருவிளக்கு இரண்டும் சந்திராதி
6. த்த வரை ஏற்றக் கடவோம் இக்கோயில் நம்பி ம(ாரே)ாம் இத்திருவிளக்கு ஸ்ரீ வைஷ்ணவ ரக்ஷை
7. திருவிளக்கேற்ற இக் குருகுலராயர் இட்ட திருக் குத்தி வி(ளக்கு) . . . னால் எடை . . .

## கல்வெட்டு எண் 2

**இருப்பிடம் :** *கருவறையின் தென்புற, மேற்புற வெளிச்சுவர்களில் மூன்று துண்டுகளாக உள்ளது. முழுமை இன்றி உள்ளது.*

**காலம் :** *கி.பி. 1436 ஆகலாம்*

**வாசகம் :**

I 1. ஸ்ரீ மன்மகா மண்டலேசுர மூவராயர் (கண்)ட பாஷைக்குத் தப்புவர
2. ராயர் கண்ட வீரதேவராய மஹா இராய(ர்க்கு)ச் செல்லா நின்ற ஆனந்த
3. வருஷம் தை மாஸம் மேதினி மீசுர கண்(ட) கட்டாரி சாளுவ பெம்மை
4. ய தெய்வ மகா இராசா ஜயங்கொண்ட (சோ)ழ வளநாட்டில் தொண்டை
5. மண்டலத்தில் புழல்க் கோட்டத்தில் (அம்)பத்தூர் நாட்டில் விசையா . . .

II 1. இறைவர்க்கு திருவிளக்கு
2. விட்டளவுக்கு இந்தத் . . . .

III 1. அகிதம்
2. ள் உண்டானால் கெ

3. ங்கைக் கரை
4. யில் கராந்ப(சு) . . . .

## கல்வெட்டு எண் 3

**இருப்பிடம் :** மகாமண்டபக் கிழக்கு வெளிச்சுவர் துண்டுக் கல்வெட்டு

**காலம் :** தெலுங்குச் சோழ அரசன் விசய கண்ட கோபாலன் கி.பி. 13-ஆம் நூற்றாண்டு.

**வாசகம் :**

1. (வி)சைய கண்ட . . .
2. தியதி நாள் . . .
3. கு நுளப்பியாறு . . .
4. வந்த நாயனார்[5] . . . .
5. பிமார் கை . . . .
6. இத் திருவிளக்கு . . .

---

1. தொல்லியல் துறைத் தொழில் நுட்ப உதவியர் திரு. ஸ்ரீகுமார் இக்கோயிலில் கல்வெட்டுகள் உள்ளமை பற்றித் தகவல் தெரிவித்தார். இக்கட்டுரையாசிரியருடன் கல்வெட்டு படியெடுப்பவர் திரு. க. ஈஸ்வரன், கல்வெட்டுச் சிற்றெழுத்தர் திரு. பெ. முருகேசன், கல்வெட்டுப் பயிற்சி நிறுவன மாணவர்கள் சக்திவேல், புண்ணியமூர்த்தி, திருமூர்த்தி, கோவிந்தராஜ், சுப்பிரமணியன், குமாரவேல் ஆகியோர் ஆய்வில் பங்கேற்றனர்.
2. திருவொற்றியூர்க் கல்வெட்டுகளில் நுளப்பியாறு குறிப்பிடப் படுவதாகக் கல்வெட்டாய்வாளர் திரு. க. குழந்தைவேலன் தெரிவிக்கிறார்.
3. ARE 339/1982.
4. ம௨ஆ எனப் பொறிக்கப்பட்டுள்ளது, "வருடம்" என்பதன் சுருக்கமாகவோ, "ஆவது" என்பதன் சுருக்கமாகவோ கொள்ளலாம்.
5. "நாயனார்" என்ற குறிப்பு சிவபெருமானைக் குறிப்பதாகக் கொண்டால் இக்கல்வெட்டு, வேறொரு சிவன் கோயிலுக் குரியதாக இருந்து, அக்கோயில் சிதைந்த பிறகு இக் கோயிலில் வைத்துக் கட்டப்பட்டிருக்க வேண்டும் என ஊகிக்கலாம்.

# 8 உடையார் கோயில்

**ச. பரணன்**
காப்பாட்சியர்
தொல்லியல்துறை, தஞ்சாவூர்

தஞ்சை மாவட்டத்துக்கு உட்பட்ட உடையார் கோயில், தஞ்சை நாகப்பட்டினம் பேருந்து வழித்தடத்தில், தஞ்சையிலிருந்து 18 கி.மீ. தொலைவில் காவிரி (அரசலாறு) தென்கரையில் அமைந்துள்ளது.

இறைவன் பெயர் - கரவத்தீஸ்வரர் எனும் திருக்களாவுடையார்
இறைவியின் பெயர் - தர்மவல்லி
தீர்த்தம் – திரிபுவன மாதேவிப்பேரேரி
தல விருட்சம் - திருக்களா (கரவிந்தம்)

கோயில் முன் அமைந்துள்ள பேரேரி ஒரு காலத்தில் தீவு போல் சுற்றிலும் அமைய நடுவில் கோயில் அமைந்திருந்தது. பின்னர் போக்குவரத்து வசதிக்காக இடது பக்கம் மட்டும் மண் கொண்டு மூடப்பட்டு தற்போது கோயிலின் மூன்று புறமும் பெரிய ஏரி காணப்படுகிறது. இவ்விதம் நீர்நிலையின் நடுவில் இக்கோயில் அமைந்திருந்தது ஒரு தனிச் சிறப்பாகும். களாச் செடியை தல விருட்சமாக கொண்டதால் இறைவன் திருக்களா வுடையார் என அழைக்கப்பட்டார். கரவிந்தம என்னும் வட சொல்லுக்கு களா மரம் எனவும், கரவிந்தேஸ்வரம் என்பது கரவிந்தீஸ்வரர் என்று மருவி களாவுடைய பெருமாள் என்று பொருளாட இருக்களாவுடையார் என்ற தமிழ் பெயரிலேயே இவ்வூருக்கும் உடையார்கோயில் என பெயர் வந்துள்ளது.

இத்திருக்கோயில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. மூன்று பிரகாரங்களைக் கொண்டுள்ளது. முன் கோபுரம் ஐந்து நிலை களையும், (51 அடி உயரம்) அதனை அடுத்துள்ள உள்கோபுரம் இரண்டு நிலைகளையும் கொண்டது. கருவறையில் மூலவர் கிழக்கு நோக்கியும், உள்மண்டபத்தில் உள்ள அம்மன் சந்நிதி தெற்கு நோக்கியும், இச்சந்நிதிக்கு நேர் எதிரே உக்கிரசாந்தி விநாயகர் சந்நிதி அமைந்துள்ளது. வசந்தமண்டபம் கோயிலுக்கு வெளியில்

தெற்கு நோக்கி அமைந்துள்ளது, சுற்றளவு கீழ்மேலடி நீளம் 243 அடி, தென்வடலடி அகலம் 166 அடி, பரப்பு 40338 சதுர அடிகளாகும். உள்பிரகாரத்தில் மேற்கு வரிசையில் முக்குருணிப் பிள்ளையார், பிரும்மபுரீஸ்வரர், ஆனந்தபுரீஸ்வரன், சதுர்தேவ புரீஸ்வரர், கஜலட்சுமி, பூலோநாதர் முதலிய சன்னதிகளும், வடக்கில் திருக்களாவிருட்சமும் சண்டிகேஸ்வரர் சன்னதியும் கிழக்கில் வாகனமண்டபம், மடப்பள்ளியும் அமைந்துள்ளது. இரண்டாம் பிரகாரத்தின் தெற்கில் நந்தவனம் அமைந்துள்ளது. கோயிலுக்கு எதிரில் திருக்குளமும் அமைந்துள்ளது. குளத்துக்கு வெளியே நான்கு தேரோடும் வீதிகள் உள்ளன. கருவறையில் தேவகோஷ்டத்தில் ஆலமர்செல்வன், அடிமுடிகாணா அண்ணல், பிரம்மன் ஆகியன அமைந்துள்ளன. விமானம் நாகரம் அமைப்பில் அமைந்துள்ளது. இக்கோயிலில் அலங்கார மண்டபம், மகா மண்டபம், அர்த்த மண்டபம் மற்றும் கருவறை அமைந்துள்ளது.

இக்கோயிலில் உள்ள கல்வெட்டுக்களில் காலத்தால் முந்தியது முதலாம் இராசேந்திரனின் 31-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டாகும். (கி.பி. 1045) இம்மன்னனின் கல்வெட்டில் "நம்மூர் திரிபுவன மாதேவிப் பேரேரி உள்ளால் எழுந்தருளியிருந்த திருக்கிளா உடையார் மகாதேவர் கோயிலில்" என்று குறிப்பிடுவதிலிருந்து ஏரியின் நடுவில் இக்கோயில் அமைந்திருந்தது என்பதும் அவ் ஏரியின் பெயர் திரிபுவனமாதேவிப் பேரேரி என்பது அறிய முடிகிறது. மூன்றாம் குலோத்துங்க சோழனின் 18-ஆம் ஆட்சி யாண்டு கல்வெட்டில் கருவறையில் உள்ள மூலவருக்கு ஸ்ரீபீடம் சாத்தாது ஆண்டுதோறும் பசுங்கூட்டாலே சீரணோத்தாரணம் பண்ண வேண்டியிருந்தது. இதனை மணலூர் வாதுவன் ஆராவ முது மாதேவரான விக்கிரமசோழன் பிரமராயர் அரசனுக்கு அறிவித்து, அதற்கு மன்னனும் ஆயிரம் காசு தந்து போதாமல் போனால் சீபண்டாரத்திலிருந்து எடுத்துக்கொள்ளுமாறும் ஆணை யிட்டான். கொடியூர்ப் பட்டணத்தில் கிள்ளியூர் மலையினின்றும் கல் கொண்டு வந்து, சாத்திரப்படியே ஸ்ரீபீடமும் செய்யப்பட்டது. இப்பீடம் சைவாச்சாரியர்களினால் கருவறையில் சாத்த முடிய வில்லை. இதனை நிவரம்பூர் உடையான் தேவனான உதய திவாகரனும் அவன் மக்களும் (சிற்ப விற்பன்னர்கள்) அப்பீடத்தை சாத்தினர். இவர்களுக்கு இறையிலியாக சிற்றூர் வழங்கப்பட்டது.

இவ்வூர் கல்வெட்டுகளில் நித்தவிநோதவளநாடு, வீரசோழ வளநாடு என்று குறிப்பிடப்படுகிறது. மேலும் இவ்வூர் சதுர் வேதிமங்கலம் ஆகும். முதலாம் இராசேந்திரன் ஆட்சிக் காலத்தில் இருந்து மூன்றாம் இராசேந்திரன் காலம் வரையிலும் இவ்வூர் சதுர்வேதிமங்கலம் என்று கல்வெட்டில் குறிப்பிடப்படுகிறது. இவ்வூரின் பெருங்குறி மகாசபை ஒன்று இருந்தது. இச்சபையால் கோயில் காரியங்களை நிர்வாகம் செய்து வந்தனர். இவ்வூர் கல்வெட்டுகளில் இருந்து குலோத்துங்க சோழ விண்ணகர ஆழ்வார் கோயில் மற்றும் திருப்பாற்கடல் ஆழ்வார் கோயில் ஆகியன இருந்துள்ளதாக அறிய முடிகிறது. தற்போது சிவன் கோயிலிருந்து சுமார் 2 கி.மீ. தெற்கே ஒரு பெருமாள் கோயில் சிதலமுற்ற நிலையில் நான்கு கைகளுடன் 6 அடி உயரத்தில் ஸ்ரீதேவி, பூதேவி உடன் நின்ற நிலையில் உள்ளது. இக் கோயிலில் மூன்றாம் குலோத்துங்கன் கல்வெட்டு ஒன்றில் பின் வரும் பாடல் கல்வெட்டு காணப்படுகிறது.

ஸ்வஸ்திஸ்ரீ
''தண்டீச்சரன்ஓலை சாகரம் சூழ்வையத்து
சண்டீச்சரன் கருமம் ஆராய் பின் – பண்டே
அறஞ்செய்தான் செய்தான் அறங்காத்ததான் பாதம்
திறம்பாமல் சென்லிமேல் வைத்து''
- ஆதிசண்டேஸ்வரன் ஆதேசம்


மேற்காணும் பாடலில் ஆதிசண்டேஸ்வரன் ஆதேசம் என்பது ஆதிசண்டேஸ்வரன் கட்டளை என்று பொருள்படும். இவ்வூர் கல்வெட்டுகளிலிருந்து கௌசலைவதி, திருவரங்கவதி என்ற பெயர் களில் சாலைகள், இருந்துள்ளன. இவ்வூரில் ஓடிய வாய்க்கால் களுக்கு உய்யங்கொண்டான் வாய்க்கால், கங்கைகொண்ட சோழன் வாய்க்கால் என்ற பெயர்கள் இடம் பெற்றிருந்தன. விளைநிலங் களுக்கு சில்வரி, பெருவரி, அந்தராயக் காசு என்ற வரிகள் விதிக்கப்பட்டிருந்தன

இவ்வூரில் பிற கோயில்களாக ஒரு பழைய, இடிந்த கல்வெட்டில் குறிக்கப்பெறும் பெருமாள்கோயில் ஒன்று, கல்யாணி ஐயனார்கோயில், பொன்னியம்மன் கோயில், சுந்தரியம்மன் கோயில், பூலோகநாதர் கோயில், ஆலவிநாயகர் கோயில்கள் அமைந்துள்ளன. ★

# 9 சென்னையில் கி.பி. 17-ஆம் நூற்றாண்டுக் கிணறு

சீ. வசந்தி
அகழாய்வாளர், சென்னை

வடசென்னையில், பாரதி மகளிர் அரசு கலைக் கல்லூரி உள்ளது. அக்கல்லூரிக்காக ரூபாய் 50 லட்சம் செலவில் புதிய கட்டிடம் கட்டவேண்டி, ஆழ்குழாய்க் கிணறு அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. அப்பொழுது சில செங்கற் துண்டுகள் கிடைத்தன. அவர்கள் பணி மேலும் தொடரா



வண்ணம் 21 அடி ஆழத்தில் வெற்றிடம் ஒன்று தோன்றியதாலும், நீர் ஊற்ற, ஊற்ற உள்வாங்கிக் கொண்டதாலும், பொதுப் பணித்துறையினர் தொல்லியல் துறையை அணுகினர். அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.[1] மேலும் மாதிரி அகழாய்வு 16 — 4 — 2001 அன்று முதல் மேற்கொள்ளப் பட்டது.

மாதிரி அகழாய்வு, சென்னை பாரதி மகளிர் கல்லூரியில்[2] 3X3 மீட்டர் அளவில் மேற் கொள்ளப்பட்டது. இம்மாதிரி அகழாய்வில் 1,45 மீட்டர் ஆழத்தில் 1.75 செ.மீ. ஆரமுடைய பெரிய கிணறு ஒன்று வெளிப்படுத்தப்பட்டது. இக்கிணற்றின் ஆரத்தினை நோக்கும் போது, இது 3.50 செ.மீ. விட்டமுடையதாக இருக்கக்கூடும். இக்கிணற்றின் பகுதிகள் 1.10 மீ. ஆழம் வரையில் வெளிப்படுத்தப்பட்டன. இச்செங்கற்கள், 12 செ.மீ. X 25செ.மீ. X 3.5செ.மீ. என்ற அளவிலானவை. அதாவது 9'' $3\frac{3}{4}$ அடி அளவுள்ள பண்டையச் செங்கற்களின் வகையைச் சேர்ந்தவைகளாகும். இச் செங்கற்களுக்கு இடையில் களிமண் இணைப்பாக பயன்படுத்தப் பட்டுள்ளது. கிணற்றின் உட்புறம் பூச்சு செய்யப்படவில்லை.



ஆனால் வெளிப்புறம் சுண்ணச் சாந்து பூச்சு செய்யப்பட்டுள்ளது. இச்சுண்ணாம்பு சாந்து பூச்சு 1.4 செ.மீ. கனமாக உள்ளது. கிணற்றின் ஒரு பகுதி மட்டுமே வெளிப்படுத்தப் பட்டாலும், கி.பி. 17-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கிணற்றின் முழுமையான அமைப்பினை அறிய முடிகின்றது.

அடிக்குறிப்பு

1. அருங்காட்சியகத் துறை ஆணையர் முனைவர் திரு. ஆர். கண்ணன் இ.ஆ.ப., தொல்லியல்துறை இயக்குநர் அ. அப்துல் மஜீத், திருச்சி பதிவு அலுவலர் திரு. கி. ஸ்ரீதரன் அகழாய்வாளர் திருமதி சீ. வசந்தி ஆகியோர் இப்பகுதியில் 11 — 4 — 2001 அன்று ஆய்வு மேற்கொண்டபோது ஆங்கிலேயர் கால காசு ஒன்று கிடைத்தது. மற்றும் பிற் காலத்தைச் சேர்ந்த பானை ஓடுகளும் கிடைத்தன.

2. மாதிரி அகழாய்வு பணியில் பங்குகொண்டவர்கள்: திரு. ஆர். செல்வராஜ் தொல்லியல் அலுவலர், திரு. மு. த. ஸ்ரீதரன் நிழற்படம் எடுப்பவர் ஆகியோர் ஆவார்கள்.

# 10 புதுப்பாடி வேதநாராயண பெருமாள் கோயில்

**து. துளசிராமன்**
காப்பாட்சியர்
ஆர்க்காடு அகழ்வைப்பகம்

ஆர்க்காடு - செய்யாறு சாலையில் ஆர்க்காட்டிலிருந்து சுமார் 8 கி.மீ. தூரத்தில் பாலாற்றின் தென்கரையில் அமைந்துள்ள ஓர் அழகிய சிற்றூர் புதுப்பாடி. இவ்வூர்ச் சாலையின் இடது பக்கத்தில் உள்ள கால்வாய்க்கு வடகரையில் வேதநாராயண பெருமாள் கோயில் உள்ளது.

## கோயில் அமைப்பு

கிழக்கு பார்த்துள்ள மிகச்சிறிய இக்கோயில் கருவறை, இடைக்கட்டு, முகமண்டபம், முன்மண்டபம், திறந்தவெளி மேடை, பலிபீடம், கொடி மரம் எனக் கோயிலுக்கு வேண்டிய முக்கிய அங்கங்கள் அனைத்தையும் தன்னகத்தே கொண்டு மிளிர்கிறது. கருங்கல்லாலான இக்கோயிலின் கருவறை நீள் சதுர வடிவில் சிறியதாகவும், சதுரத்தூண்கள் தாங்கும் முகமண்டபம், முன் மண்டபம் ஆகியவைப் பெரியதாகவும் உள்ளன. இக்கோயில் கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் விஜயநகர மன்னர்கள் காலத்தில கட்டப்பட்டுள்ளது.

## கலையழகு வாய்ந்த சிற்பங்கள்

வேதநாராயண பெருமாள் கோயிலுக்கு மிகவும் சிறப்பும் பெருமையும் தருவது இதிலுள்ள கலையழகு வாய்ந்த சிற்பங்களே என்றால் அது மிகையாகாது. பழஞ்சிறப்பு வாய்ந்த இவ்வழகிய சிற்பங்கள் உலகை உய்விக்கும் பரமனின் பல்வேறு திருககோலங் களை பாங்குறக் காட்டும் கண்ணாடிகளாகத் திகழ்கின்றன.

## வேதநாராயண பெருமாள்

கருவறையில் மூலவராக திகழும் எம்பெருமான், தலையில் கிரீட மகுடம் தாங்கி, மேலிரு கரங்களில் சங்கும் சக்கரமும் ஏந்தி,

கீழ்க் கரங்களில் அபயமும் வரதமும் காட்டி தம் இடது காலை ஆசனத்தில் மடக்கி வைத்து, வலது காலை கீழே தொங்கவிட்டு தம் தேவியரான ஸ்ரீதேவி, பூதேவியுடன் மிகவும் கம்பீரமாக அமர்த்துள்ளார். பெருமாளின் காதுகளில் மகர குண்டலங்களும், கழுத்தில் நான்கு வரிசை ஆரங்களும், மேற்கைகளின் நடுவில் கேயூரங்களும் அணி செய்கின்றன. இடையில் அணிந்துள்ள ஆடை கணுக்கால் வரை நீண்டுள்ளது. இறைவனின் இரு பக்கலிலும் அமர்ந்து அடியவர்களுக்கு அருள்பாலிக்கும் அன்னையரான ஸ்ரீதேவி பூதேவி ஆகியோர் தம் தலையில் கரண்ட மகுடம் சூடி, காதுகளில் பத்ர குண்டலங்களும் கழுத்தில் இரண்டு வரிசை ஆரங்களும் அணிந்துள்ளனர்.

## தூண் சிற்பங்கள்

முன் மண்டபம், முகமண்டபம் ஆகியவற்றைத் தாங்கும் எட்டுத் தூண்களின் நான்கு பக்கங்களிலும், பக்கத்திற்கு மூன்று சிற்பங்கள் வீதம் கவினுற வடிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் கீழ்காணும் சிற்பங்கள் கலையழகு வாய்ந்தவை.

1. லட்சுமி நரசிம்மர்
2. துர்க்கை
3. வீணை மீட்டும் மங்கை
4. சதுர நடனமாடும் ஆண்
5. கொம்பூதும் ஆண்
6. சாமரம் வீசும் பெண்
7. கங்காளம் ஊதுபவன்
8. கண்ணனை யசோதை கம்புடன் துரத்தும் காட்சி
9. ஒயிலாக நடனமிடும் மாது
10. மத்தளம் வாசிப்பவர்.
11. இருபுறமும் தயிர் பானைகளை கட்டித் தொங்கவிட்ட காவடியை தோளில் சுமந்து செல்லும் ஆயர் மகன்.
12. இராமர், இலட்சுமணர், அனுமன்.
13. தாளமிடும் ஆண்கள்.
14. காளீயநர்த்தனர்.
15. பாலகிருஷ்ணர்.
16. திரிவிக்கிரமர்.

கோயில் முக மண்டபத்தின் சுவர்களில் கவின்மிகு காட்சிகள் சிற்பங்களாக வடிக்கப்பட்டுள்ளன. அரக்கர்கள் அகிலத்திற்கு விளைவித்த இன்னல்களைக் களைய திருமால் அவ்வப்பொழுது அவதாரங்கள் பல எடுத்து, அவர்களை அழித்து உலகை காப்பாற்றினார். அக்கதைகளில்

1) விசுவாமித்திரர் யாகத்தை இராமர் லட்சுமணர் காத்தல்
2) கண்ணன் கோபியர்களுடன் காட்சி தருதல்
3) கண்ணன் கோவர்த்தன மலை எடுத்து காக்கும் காட்சி
4) கண்ணனும் நாரை வடிவ அரக்கனும்
5) திருவிக்ரம அவதார வரலாறு ஆகியவை

இங்கு சிற்பங்களாக வடித்து காட்டப்பட்டுள்ளன.

மேலும் இங்கு பாலகிருஷ்ணர் உறியிலிருந்து வெண்ணெய் திருடும் காட்சி மிகத் தத்ரூபமாக வடிக்கப்பட்டுள்ளது.

**கல்வெட்டுகள்**

இக்கோயிலில் மொத்தம் நான்கு கல்வெட்டுகள் (S.I.I. Vol. XXII Nos 255 to 258) அவற்றுள் இரண்டு தமிழ், ஒன்று தெலுங்கு, மற்றது கன்னடம். இக்கல்வெடடுகள் யாவும் இறைவனை வேத நாராயண பெருமாள் என்றே அழைககின்றன. கி. பி. 1496 ஆம் ஆண்டைச் சேர்ந்த ஒரு கல்வெட்டு இவ்வூரை பாண்டி நல்லூரான புதுப்பாடி என்று அழைக்கிறது. கி.பி. 1624ஆம் ஆண்டைச் சேர்ந்த மற்றொரு கல்வெட்டு "கலவைந் பற்று கரை வழி புதுப்பாடி" என்கிறது. முதல் கல்வெட்டு, வண்டிப்பேட்டை காமுநாயக்கர் மகன் கோவிந்த நாய்க்கர் என்பவர் திருவில்பட்டி என்னும் ஊரில் 2100 குழி நிலத்தை இக்கோயிலுக்கு திருவிடையாட்டமாக (வைணவ கோயில்களுக்கு அளிக்கப்பெறும் வரியில்லா நிலம்) அளித்த செய்தியைத் தெரிவிக்கிறது. இக்கோயிலை மாற்றி கட்டியது குறித்த சுவையான செய்தியை தெரிவிக்கும் கல்வெட்டு ஒன்று இங்குள்ளது. விவரம் பின் வருமாறு:-

சீரும் சிறப்புமாக இருந்த இக்கோயில் பிற்காலத்தில் மிகவும் பாழ் அடைந்து விடுகிறது. இறைவனுக்கு பூசைகள் நடப்பது கூட நின்று விடுகிறது. இச்சமயத்தில் அதாவது கி. பி. 1624ல் அரசப்புடையார் மகனார் ஓபுள நாய்க்கர் படைவீடு இராச்சியத்தின்

சிற்றரசராக இருக்கிறார். அவரிடம் உகப்பணங்கள் அண்ணப் பங்கார் என்பவர் மேற்படி கோயிலின் நிலையைக் கூறுகிறார். இதனை அறிந்த ஒபுள நாயக்கர் மகர சங்கிராந்தி தினத்தன்று பம்பாசாகரத்தில் உள்ள விட்டலதேவர் சன்னதியில் இருந்தபடி புதுப்பாடி வேத நாராயண பெருமாள் கோயிலை புதுப்பித்து, பூசைகள் நடத்துவதற்கு கையில் நீர்வார்த்து உறுதி செய்து ஆணையிடுகிறார். இதன்படி இதுவரை சரிவர பராமரிக்கப் படாமல் இருந்த இக்கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் இவர் (உகப்பணங்கள் அண்ணப்பங்கார்) குடியிருந்து கொண்டு இந் நிலங்களில் வேண்டிய பயிர் செய்துக் கொள்ளலாம். இவர் கோயிலைச் சீர் செய்து புதுப்பித்து இறைவனை பிரதிஷ்டை செய்து அதற்கு வேண்டிய பூசைகள் செய்யவேண்டும். கோயில் செலவுகளுக்காக வருடந்தோறும் முப்பது பணம் செலுத்தவேண்டும். மேலும் இந்நிலத்தில் பயிர் செய்வதற்கு ஆற்றுக்கால் பாசனத் திற்கு உரிய வரிகளையும் கட்டிக் கொள்ள வேண்டும் என்பதாகும்.

## சமணக் கோயில்

இவ்வூரில் பொதுப் பணித் துறை மாளிகை அருகில் உள்ள கற்பலகையில் கி.பி. 11ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு துண்டு கல்வெட்டு உள்ளது. இக்கல்வெட்டு இங்கு இருந்த இரவிகுல மாணிக்கப் பெரும்பள்ளி என்னும் சமணக் கோயிலைக் குறிக்கிறது. தற்போது அக்கோயில் இங்கு காணப்படவில்லை. ஆனால் கி.பி. 17ஆம் நூற்றாண்டில்கூட இச்சமணக் கோயில் இவ்வூரில் இருந்துள்ளது என்பதை வேத நாராயண பெருமாள் கோயில் கல்வெட்டு ஒன்று குறிக்கிறது. அதாவது இக்கல்வெட்டு இப் பெருமாள் கோயிலுக்கு கொடுக்கப்பட்ட திருவிடையாட்ட நிலங் களின் எல்லைகளைக் குறிக்கும் போது "அருகத்தேவர் கோயில் வடக்கும்" என்கிறது.

## பலி பீடம்

வேத நாராயணப் பெருமாள் கோயிலின் பலி பீடத்தை கி.பி. 17ஆம் நூற்றாண்டில் தங்கமுத்து மகன் பெத்தி என்பவர் செய்து கொடுத்துள்ளார். இதனைக் குறிக்கும் கல்வெட்டு இப் பலி பீடத்திலேயே உள்ளது.

# அண்மைக்கால அகழாய்வுகள்

தமிழகத் தொல்லியல்துறை கோவை மாவட்டம் பேரூரிலும், திருநெல்வேலி மாவட்டம் மாங்குடியிலும் ஜூலை முதல் அக்டோபர் 2002 வரையிலும் அகழாய்வுகளை மேற்கொண்டது. அகழாய்வில் தமிழக வரலாற்றுக்கு மேலும் புதிய செய்திகளை அளிக்கும் வரலாற்றுச் சான்றுகள் கிடைத்துள்ளன.

## 1. பேரூர் அகழாய்வு - கோயமுத்தூர் மாவட்டம்

கோவை மாவட்டம் பேரூர் கிராமத்தில் 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சுடுமண் பொம்மைகள், தாய்த் தெய்வம், சங்கு வளையல்கள், விலை உயர்ந்த வண்ணக்கல் மணிகள் ஆகியவற்றைத் தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறை கண்டறிந்துள்ளது.

பேரூர் கிராமத்தில் அகழாய்வுப் பணிகளை மேற்கொண்ட போது இந்த அகழாய்வில் அரிய பழம் பொருள்கள் கிடைத்துள்ளன. 2 செ.மீ. விட்டம் உள்ள சிறிய வட்டச் சில்லு ஒன்றில் சேரர் சின்னமான வில் பொறிக்கப்பட்டுக் கிடைத்துள்ளது. இவ்வாறு உருவம் பொறித்த சின்னம் கிடைப்பது இதுவே முதன் முறை. இவ்வகைச் சில்லுகள் தட்டாம் பூச்சி விளையாட்டுச் (Hip Hop) சில்லுகள் என்றும், எடைக் கற்கள் என்றும் இரு வேறு கருத்துகள் உள்ளன. இதுதவிர, அடையாளச் சின்னங்கள் என்ற புதிய கருத்தும் தற்போது உருவாகியுள்ளது.

இரு புறமும் குத்து விளக்குகளும், நடுவில் வில்லும் மேலே சந்திரப் பிறையும் இச்சில்லில் கீறி வரையப்பட்டுள்ளன.

காசுகளிலும், செப்பேட்டு முத்திரைகளிலும் இரு குத்து விளக்குகளின் இடையே அரசுச் சின்னங்கள் காட்டப்படுவது போலவே இதுவும் காணப்படுவது சிறப்பாகும்.

காஞ்சி (நொய்யல்) ஆற்றங்கரையில் அமைந்துள்ள பேரூர் காஞ்சிவாய்ப் பேரூர் என்று கி.பி. 8-ம் நூற்றாண்டைச் சார்ந்த பாண்டியர் செப்பேடுகளில் காணப்படுகிறது.

சுந்தரர் தேவாரப் பாடலில், 'பேரூர் உறைவாய் பட்டிப் பெருமான் பிறவா நெறியானே' என்று இவ்வூர் இறைவனைப் போற்றி வணங்கியுள்ளார்.

பெரிய புராணத்தில், 'மீகொங்கில் காஞ்சிவாய்ப் பேரூர்' என்று இவ்வூரைக் குறித்துள்ளார் சேக்கிழார். இவ்வூர் ஆற்றங் கரைப் பகுதியில் அண்மைக் காலத்தில் தொல்லியல் ஆய்வாளர் களும், ஆர்வலர்களும் பல்வேறு தொல்பொருட்களைச் சேகரித் ததைத் தொடர்ந்து, இவ்வூரில் திருநீற்றுமேடு, சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரி வளாகத்தில் கள்ளிமேடு ஆகிய இடங் களில் தொல்லியல் துறை அகழாய்வு நடத்தியது.

சுட்ட மண்ணால் கிராமிய முறையில் செய்யப்பட்ட சிறுசிறு உருவங்கள், மரத்தடியில் விநாயகர் அமர்ந்திருப்பது போன்ற வார்ப்பு அச்சு, அழகிய மயில் உருவம் கொண்ட கழுத்தில் அணியும் சிறு சுடுமண் பதக்கம், மாக்கல்லால் ஆன மயில் உருவம் கொண்ட சிறுசிற்பம் ஆகியவை அகழாய்வில் கிடைத்துள்ளன.

வடநாட்டு மதுரா கலைப் பாணியில் அமைந்த சிறு சுடுமண் உருவத்தின் உடைந்த தலைப்பகுதி குறிப்பிடத்தக்க சிறப்பை உடையது.

கலைப்பாணியை வைத்து இவை கி.பி. 5,6-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை என்று கருதப்பட்டாலும் அறிவியல் முறையில் இரசாயனக் கூடத்தில் காலம் கணிக்கப்பட உள்ளது.

வடநாட்டுடன் தமிழகத்தை இணைக்கும் வணிகப் பாதையில் தமிழகத்தின் நுழைவாயில் பகுதிகளில் ஒன்றாக இப்பேரூர் விளங்கியது என்பதை இத்தொல்பொருட்கள் உணர்த்துகின்றன.

பல்கலைப் பண்பாட்டுக் கூடமாகவும், வணிகத் தலமாகவும், சமயத் தலமாகவும் இப்பகுதி விளங்கியதை இவை சொல்லாமல் சொல்கின்றன.

இவ்வகழாய்வுப் பணி மேம்பாடு தொடர்பாக பேராசிரியர் கே. வி. ராமன், சாந்தி பப்பு ஆகியோரின் ஆலோசனைகள் பெறப்பட்டுள்ளன.

தொல்லியல் உதவி இயக்குநர் (பொறுப்பு) மா. சந்திரமூர்த்தி தலைமையில் இரா, பூங்குன்றன், து. துளசிராமன் இரா. செல்வ ராசு இரா. ப. கருணானந்தன், தி. சுப்பிரமணியன், பெ. கௌதம புத்திரன், அர. வசந்தகல்யாணி ஆகியோர் கொண்ட குழு இந்த அகழாய்வு பணியை மேற்கொண்டது.

## 2. மாங்குடி அகழாய்வு - திருநெல்வேலி மாவட்டம்

சங்ககாலப் புலவரும், மதுரைக் காஞ்சி மற்றும் சில சங்கப் பாடல்கள் பாடியவருமான மாங்குடி மருதனாரின் சொந்த ஊர் மாங்குடி என்று கருதப்படுகிறது. இந்த கிராமத்தின் மேற்பரப் பாய்வில் கிடைத்த ரோமானிய ஓடுகளைக் கருத்தில் கொண்டு, இதே கிராமத்தில் அகழாய்வு செய்வதற்கு நிதி ஒதுக்கீடு செய்து தமிழக அரசு நடவடிக்கை எடுத்தது. அதன்பேரில், தொல்லியல் துறை அகழாய்வினை மேற்கொண்டது.

மாங்குடியில் உள்ள நாயக்கர் புஞ்சை என்ற பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுக் குழியில், சங்ககாலத் தொடர்பை நினைவூட்டும் வகையில் கல்மணிகள், கருப்பு, சிவப்புப் பானை ஓடுகள் மற்றும் பிற தொல்பொருள்கள் கிடைத்துள்ளன.

இந்நிலையில், அகழாய்வுக் குழியில் 1·08 மீட்டர் ஆழத்தில் கருப்பு சிவப்பு நிற மண்தட்டின் உடைந்த அடிப்பகுதியில் 14 தமிழ் - பிராமி எழுத்துகள் கொண்ட வாசகம் கிடைத் துள்ளது. இதில் "குறூம்மாங்கள அதனயியானைபொ" எனப் பொறிக்கப்பட்டுள்ளது. மேலும் எழுத்துப் பொறிக்கப்பட்ட நான்கு பானை ஓடுகளும் கிடைத்துள்ளன. இது ஒரு சிறப்பான வரலாற்றுச் செய்தியாகும். உடைந்த தட்டு என்பதால், முன்னும் பின்னும் வாசகம் தொடர்ச்சியில்லாமல் உள்ளன. இவ்வெழுத்துகள் தமிழகத்தில் கிடைத்துள்ள தொன்மையான எழுத்து வகையைச் சேர்ந்தவை. எழுத்தமைதியைக் கொண்டு இதனை கி.மு. இரண்டாம் நூற்றாண்டு எனக் கருதலாம். மா, கா, தா ஆகிய எழுத்துக்களை குறில்களாக படிப்பதாலேயே வாசகப் பொருளை பெற முடியும். இவ்வகையில் படிக்கப்படும் எழுத்துக்கள் திருப்பரங்குன்றம், மீனாட்சிபுரம், சித்தன்னவாசல் ஆகிய இடங்களில் காணப்படுகின்றன. சென்னை அருங்காட்சியகத்தில்,

பட்டிபரோலு என்ற இடத்தில் இருந்து கொண்டு வந்து வைக்கப் பட்டுள்ள பௌத்த ஸ்தூபக் கற்பேழையில் இவ்வகை எழுத்தே எழுதப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். மேலும் இவ்வகழாய்வில் சிவப்பு பூச்சு வகை ஒரு முழு பானையின் விளிம்பில் படகு குறியீடு பொறிக்கப்பட்டுள்ளதும் கிடைத்துள்ளது சிறப்பாகும். மேலும் மான் கொம்புகள், விலங்குகளின் எலும்புகள் போன்றவைகளும் கிடைத்துள்ளன. எலும்புத் துண்டுகளை அறிவியல்ஆய்வுக்கு அனுப்பும் நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

மாங்குடி மருதனார் தனது மதுரைக் காஞ்சியில், தலையாலங் கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன், நிலந்தரு திருவின் நெடியோன், நன்னன், கோதை, குட்டுவன், தென்னவன், பழையன், மாறன், வாணன், மானவிறல் வேள், மழவர், கோசர், தென்பரதவர் ஆகியோரைக் குறிப்பிட்டுள்ளார். புறநானூறு, குறுந்தொகை, நற்றிணை ஆகியவற்றிலும் இவரது பாடல்கள் சில உண்டு. இவரது மதுரைக் காஞ்சியின் தொடக்க வரிகள் அப்படியே இப்பகுதியில் கிடைத்த தளவாய்புரத்து பத்தாம் நூற்றாண்டுச் செப்பேட்டிலும் காணப்படுவது மேலும் சிறப்பாகும்.

தொல்லியல் துறை உதவி இயக்குநர் (பொறுப்பு) மா. சந்திர மூர்த்தி தலைமையில், உதவி கல்வெட்டுக் கண்காணிப்பாளர் கி. ஸ்ரீதரன், மற்றும் முனைவர்கள் ஆ. பத்மாவதி, மா. செந்தில் செல்வக்குமாரன், வெ. வேதாசலம் மற்றும் ச. செல்வராஜ், சொ. சந்திரவாணன், சொ. சாந்தலிங்கம், வெ. ராமமூர்த்தி, கே. கோபாலன் ஆகியோர் அடங்கிய குழுவினரால் இந்த அகழாய்வு நடத்தப்பட்டது.

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையின் அச்சகத்தில் அச்சிட்டு
இத்துறை ஆணையர் திரு. க. அஷோக் வர்தன் ஷெட்டி, இ.ஆ.ப.,
அவர்கள் சார்பாக திரு.கி. ஸ்ரீதரன், உதவிக் கல்வெட்டு கண்காணிப்பாளரால்
வெளியிடப்பெற்றது.